22.07. 2026

ESIOP. 123/2023

PW 2 – தயேஸ்வரன்

**சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின் பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்**

குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.10 நான் தயார் செய்தது இல்லை. அப்போதைய தலைமையாசிரியர் தயார் செய்தார். அப்போது நான் அவரோடு இருந்தேன். அந்த ஆவணம் மார்ச் 2014 முதல் மே 2019 வரையான காலத்தைப் பொறுத்தது என்றால் சரிதான். நான் 2017 ஜுன் 1ஆம் தேதி மனுதாரர் பள்ளியில் பணியில் சேர்ந்தேன். 2013 மார்ச் முதல் 2017 மே காலத்தில் நான் மனுதாரர் பள்ளியில் பணிபுரியவில்லை என்றால் சரிதான். அந்த ம.சா.ஆ.10 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் தொடர்பான 2014 மார்ச் முதல் ஜுன் 2017 வரையான காலத்தில் நான் மனுதாரர் பள்ளியில் பணியில் இருக்கவில்லை என்பதால் ம.சா.ஆ.10 இல் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் பற்றி சொல்ல எனக்குத் தகுதியில்லை என்றால் அதை நான் மறுக்கிறேன். சாட்சி சொல்கிறார் ம.சா.ஆ.10 ஆவணமானது Acquittance மற்றும் வருகைப் பதிவேட்டைப் பார்த்து தான் Calculation செய்ததாகும். நான் பள்ளிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. உண்மை விவரங்கள் எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. ஆவணங்கள் அடிப்படையில் எனக்குத் தெரியும்.

மறுவிசாரணை இல்லை.